செ.வெ.எண்: 20 நாள்: 17.06.2020

# மதுரை மாவட்டம்

## மேலூர் வட்டம் சூரப்பட்டி சோதனைச்சாவடியில் கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கையாக வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.டி.ஜி.வினய்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்றை தடுப்பதற்காக மதுரை மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பிற மாவட்டங்களிலிருந்து இ-பாஸ் பெற்ற மற்றும் இ-பாஸ் பெறாமல் வரும் அனைத்து வாகனங்களையும் மதுரை மாவட்ட எல்லையான மேலூர் வட்டம் சூரப்பட்டியில் உள்ள சோதனைச்சாவடியில் தணிக்கை செய்யப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.டி.ஜி.வினய்,இ.ஆ.ப., அவர்கள் இன்று(17.06.2020) ஆய்வு செய்தார்.

இந்த சோதனைச்சாவடியில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளுர் மற்றும் இதர மாவட்டங்களிலிருந்து இ-பாஸ் மூலம் அனுமதிப்பெற்று மதுரை மாவட்டத்திற்குள் வரும் அனைத்து வாகனங்களும் தணிக்கை செய்யப்படுகிறது. குறிப்பாக சென்னையிலிருந்து வரும் பயணிகள் அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகே மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உடல் உடல்வெப்ப பரிசோதனையும், சளி பரிசோதனையும் செய்யப்பட்டு மருத்துவ முடிவுகள் வரும்வரை அவர்கள் அங்கேயே தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

அதில் யாருக்காவது கொரோனாத் தொற்று இருந்தால் அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மற்றவர்களை வீட்டில் தனிமையில் இருக்கவேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

பின்னர் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புனரி அருகே உள்ள மதுரை மாவட்ட சோதனைச்சாவடியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பி.செல்வராஜ் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்(தேசிய நெடுஞ்சாலை) திரு.கண்ணன் அவர்கள், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கண்ணகி அவர்கள், மேலூர் வட்டாட்சியர் திரு.சிவகாமி நாதன் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர் மற்றும் காவல்துறையினர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.